**சப்ரகமுவ மாகாண சபை - 2024**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சப்ரகமுவ மாகாண சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைளுக்குரிய தகவல்களும் உள்ளடங்கலாக நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் பொழிப்பு அறிக்கை 2025 மே 30 ஆந் திகதி உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் உபபிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 27 ஆந் திகதி வழங்கப்பட்டது. அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திலும் அறிக்கையின் பிரதி 1987 இன் 42 ஆம் இலகக மாகாண சபைகள் அதிகாரச் சட்டத்தின் 23(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையிலும் முன்வைப்பதற்காக ஆளுநருக்கும் சமர்ப்பிக்கப்படும்.

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்களானது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சப்ரகமுவ மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் காசுப் பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண சபையின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களின் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களைப் பரீட்சித்த போது 08 அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் நடைமுறையற்ற சொத்துக்கள் ரூபா 235,085,806 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க மீளாய்வாண்டில் மாகாண சபை நிதியத்தின் கணக்குகளில் நடைமுறையற்ற | 2025 ஆம் ஆண்டில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் முறையாக கண்காணிப்பு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்களின் பெறுமதி அத்தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சப்ரகமுவ மாகாண சபையினால் இலங்கை வங்கியில் மற்றும் மக்கள் வங்கியில் பேணப்பட்டு வந்த நாளாந்த வைப்பு முகாமைத்துவ கணக்குகளுக்காக 2025 சனவரி 01 ஆந் திகதி மற்றும் 2025 சனவரி 03 ஆந் திகதி கிடைத்திருந்த வங்கி செலவு அறிவித்தலின் பிரகாரம் 2024 திசெம்பர் மாதத்திற்குரிய வட்டி வருமானம் ரூபா 12,110,550 ஆன பெறுமதி மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய வட்டி வருமானமாக காட்டப்பட்டிருக்காமையால் பற்றாக்குறை அத்தொகையால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | 2025 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது சரிசெய்து ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பபிப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்கள் சரியாக தயாரிக்கப்பட வேண்டியதுடன் முறையான கண்காணிப்பு பேணப்படுதல் வேண்டும். |
| (இ) | சப்ரகமுவ மாகாண சபையின் நிதி விதி 429.4 இற்கு முரணாக பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம் 2017 ஆம் ஆண்டிலிருந்து சேவைக்கட்டணத்தைப் பெறுதல் மற்றும் சேவை வழங்குவதற்குரிய செலவுகள், வருமானங்கள் மற்றும் செலவுகளாக அடையாளம் காணப்படாது பொதுவைப்புக் கணக்கின் மூலம் செம்மையாக்கியதன் காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிதி ரூபா 13,706,684 ஆல் குறைத்தும் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,450,705 ஆல் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது. | 2026 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்கின்ற பணம் வருமானமாகவும் அதன் கீழ் மேற்கொள்ளப்படுகின்ற கொடுப்பனவுகள் செலவுகளாகவும் பாதீட்டில் உள்ளடக்கி நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்கு மாகாண திறைசேரியுடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. | மாகாண திறைசேரியினால் மாகாண சபையின் கீழ் உள்ள அனைத்து அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் வருமானம் மற்றும் செலவுகளை சரியாக கணக்கீடு செய்தல் தொடர்பாக முறையாக கண்காணிப்புச் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 48 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் போட்டிகளை நடாத்துவதற்காக மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்திற்கு மத்திய அரசாங்கத்தின் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் ரூபா 4,575,000 | அப்பணம் வைப்புக் கணக்குகளிலிருந்து 2025 மார்ச் 28 ஆந் திகதி மாகாண சபை வருமானத்திற்கு செலவுவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | மத்திய அரசாங்கத்திடமிருந்து கிடைத்த பணத்திலிருந்து மேற்கொள்ளப்படுகின்ற செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியிருந்தும் திணைக்களத்தின் செலவு விடயங்களின் மூலம் செலவு செய்யப்பட்டிருந்தமையின் காரணமாக மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை ரூபா 4,575,000 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | |
| (உ) | விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம் மற்றும் பிரதம செயலாளர் அலுவலகத்தினால் முறைப்படியாக ரூபா 7,170,000 மற்றும் ரூபா 1,382,233 ஆக மொத்தமாக ரூபா 8,552,233 பொறுப்புக்கள் மீதிகள் அந்த அந்த நிதிக்கூற்றுக்களில் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பொறுப்புக்களாக காட்டப்பட்டிருக்காமையால் மாகாண சபை நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் பற்றாக்குறைகள் மற்றும் அட்டுறுச் செலவுகள் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பரிசளிப்பு விழாவினை 2024 திசெம்பர் மாதத்தில் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. இப்பரிசளிப்பு விழாவினை 2025 சனவரி மாதம் நடாத்துவதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது. 2024 ஆம் ஆண்டிற்கான தேசிய விளையாட்டுப் போட்டியின் வெற்றிகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதனால் இச்செலவுகள் பொறுப்புக்கள் கூற்றில் உள்ளடக்கப்படவில்லை. | பொறுப்புக்கள் உருவாகியுள்ள ஆண்டை அடிப்படையாகக் கொண்டு கணக்குகள் தயாரிக்கப்படுதல் வேண்டும். |
| (ஊ) | காணி ஆணையாளர் திணைக்களத்தின் நிலுவை வருமானம் தொடர்பான கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான நீண்டகால குத்தகை வருமானம் ரூபா 62,481,121 தொகையும் நிலுவையான வருடாந்த குத்தகை வருமானம் ரூபா 56,678,907 தொகையுமாகும். எவ்வாறாயினும் சப்ரகமுவ மாகாணத்தின் 29 பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மத்தியில் மாதிரியாக 04 பிரதேச செயலகப் பிரிவுகளைப் பரீட்சித்த போது 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான நீண்டகால குத்தகை வருமானம் ரூபா 76,260,658 மற்றும் நிலுவையான வருடாந்த குத்தகை வருமானம் ரூபா 37,341,461 ஆக இருந்ததனால் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள நிலுவை வருமானத்தின் சரியான தன்மை தொடர்பாக கணக்காய்வில் திருப்தி | கருத்துரை தரப்படவில்லை. | 1. காணி ஆணையாளர் திணைக்களத்தினால் உரிய நிறுவனங்களைத் தொடர்புகொண்டு சரியான நிலுவை குத்தகை பெறுமதி தொடர்பான தகவல்களை பேண வேண்டியதுடன் நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமதி காட்டப்படுதல் வேண்டும்.<br>2. நிலுவைக் குத்தகையை துரிதமாக அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் குத்தகை |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ள முடியாதிருந்தது. | | செலுத்தாதவர்கள் சம்பந்தமாக உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | மாகாண சபையின் 07 அமைச்சுக்கள்/ திணைக்களங்களின் நடைமுறையற்ற சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்தல் மீளாய்வாண்டின் இறுதி வரையும் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மாகாண சபை நிதியத்தின் நிதிக்கூற்றுக்களிலும் சொத்துக்கள் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் பொருத்தமான வகையில் வெளிப்படுத்துதலும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் அச்சொத்துக்கள் சரியாக மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அந்த அமைச்சுக்கள் மற்றும் திணைக்களத்திற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | நடைமுறையற்ற சொத்துக்களை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

இங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்

இநிநதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை தொடர்பான பொறுப்பு மாகாண திறைசேரி உள்ளடங்கலாக அந்த அந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் வகிக்கப்படுகின்றது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் மாகாண சபையினால் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேண்டுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.
- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்த தன்மையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாய தன்மையும் மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்தல்களின் பொருத்த தன்மையும் மதிப்பீடு செய்யப்பட்டது.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்யப்பட்டது..

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5. நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

### 1.5.1 தலைப்பு 800 - ஆளுனர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ‘‘ஆளுநரின் சுகாதாரப் பணி’’ நிகழ்சித்திட்டத்தின் கீழ் பெறுகை நடைமுறையினைப் பனிற்பற்றாது 3600 கண்ணாடிகள் கேகாலையில் அமைந்துள்ள ஒரு தனியார நிறுவனத்திடமிருந்து ஆளுநரின் அங்கீகாரத்திற்கு இணங்க 2024 ஆம் ஆண்டில் 02 சந்தர்ப்பங்களின் போது ரூபா 1,080,000 செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. இக்கண்ணாடிகள் இருப்பு வழங்குனரினால் ஆளுநர் அலுவலகத்திலுள்ள களஞ்சியத்திற்கு ஒப்படைக்கப்பட்டு அதன் மூலம் வழங்குதல் இடம்பெற்றிருக்காததுடன் வழங்கப்பட்ட அளவு சரியானதா என்பதனை உறுதிப்படுத்தாது விலைப்பட்டியல்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இக்கண்ணாடிகள் இருப்பில் 358 கண்ணாடிகள் கேகாலை மாவட்டத்திலுள்ள சிகிச்சை நிலையங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது என்பதற்கு கையொப்பமிட்ட ஆவணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டதுடன் ரூபா 972,600 பெறுமதியான மிகுதியாக உள்ள 3,242 கண்ணாடிகள் பகிர்ந்தளிக்கப்பட்ட முறைமை தொடர்பான சான்றுகள் 2025 செப்தெம்பர் மாதம் வரையும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.` | கண்ணாடிகளை பகிர்ந்தளிப்பதற்கு இந்த அலுவலகத்தின் உத்தியோகத்ரத்களை ஈடுபடுத்துவது நடைமுறையில் சிக்கலானது என்பதனால் முன்னோடியாக கௌரவ ஆளுநரின் அறிவுறுத்தலின் படி அவரின் ஒருங்கிணைப்பு செயலகத்தின் மூலம் உரிய பகிர்ந்தளித்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.<br><br>இப்பொருட்கள் மானியமாக வழங்குவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்கள் என்பதனால் களஞ்சியத்திற்கு ஒப்படைத்தல் இடம்பெறவில்லை. கௌரவ ஆளுநரின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க உரிய கொடுப்பனவு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | 1. அரசாங்கத்தின் பணத்தை செலவு செய்யும் போது உரிய நிதிவிதி/ பெறுகை வழிகாட்டிக் கோவை பின்பற்றப்படுதல் வேண்டும்.<br>2. உறுதிப்படுத்த முடியாத பொருட்கள் சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களை அடையாளங்காண்பதற்காக உரிய பரீட்சிப்பு நடாத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.2 தலைப்பு 801 - மாகாண சபை செயலாளர் அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகாண சபை உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ இல்லம் நிர்மாணிக்கப்பட்டுள்ள காணி 2025 யூன் 27 ஆந் திகதி வரையும் பிரதம செலலாளருக்கு ஒப்படைக்கப்பட்டிருக்கவிலலை. | இக்காணி சம்பந்தமாக பிரதிப் பிரதம செயலாளரிடம் (திட்டமிடல்) விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குப் பதில் கிடைத்ததன் பின்னர் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | காணியைப் பொறுப்பேதற்காக நடவடிக்கை எடுத்தல் வேணடும். |

### 1.5.3 தலைப்பு 802 - மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு அலுவலகம்

தலைப்பு 803 - கூட்டுறவு ஊழியர் ஆணைகுழு அலுவலகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 01 ஆம் பந்தியின் பிரகாரம் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவின் தவைலர் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு தகமை பெறும் பதவிக்கு கீழ் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் நாளாந்தம் கடமைக்காக சமூகமளிப்பதற்கான தேவைப்பாடு இல்லாத போதிலும் மாதத்தில் சில நாட்கள் நடைபெறுகின்ற ஆணைக்குழு கூட்டங்களுக்கு போக்குவரத்து வசதிகள் அல்லது அதற்கான படிகளைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருந்த போதிலும் அவருக்கு எரிபொருளுடன் உத்தியோகபூர்வ வாகனம் வழங்கப்பட்டிருந்தது. | ஆளுநரின் செயலாரின் ஆஅ:10/3/17I-II ஆம் இலக்க 2007-06-27 ஆந் திகதிய கடிதத்தின் அறிவுறுத்தல்களுக்கு இணங்க தலைவருக்கு ஒரு அரசாங்க வாகனம் வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு உத்தியோகத்தரினால் காணபப்படுகின்ற சுற்றிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் சொத்துக்கள் தவறாகப் பயன்படுத்துவதனை தவிர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.4 தலைப்பு 804 - மாகாண பிரதம செயலாளர் அலுவலகம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாண பிரதம செயலாளரின் பெயரில் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுக் காணப்படுகின்ற பழைய 10 மோட்டார் வாகனங்களின் உள்ளமை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்ததுடன் இன்னும் 05 வாகனங்கள் 1993 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் ஏலத்தில் விற்கப்பட்டிருந்தது என அறிக்கையிடப்பட்டிருந்தும் அது தொடர்பான உறுதிப்படுத்தல் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே உடைந்த 04 வாகனங்களை ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் இன்னும் துருப்பிடித்துக் காணப்பட்டது. | 1993 ஆம் ஆண்டின் போது ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது, தீப்பிடித்து அழிவடைந்துள்ளது, சிதைவடைந்துள்ளது, உடைந்த பாகங்களாக காணப்படுகின்றது செயற்பாட்டு கடமைகளுக்கு ஒப்படைக்கப்பட்டதன் பின்னர் தகவல்கள் இல்லை. இன்னும் தகவல்களை தேடிப்பார்த்து அறிக்கையிடப்படும் என தெரிவிக்கிறேன. | சொத்துக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் உள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத வாகனங்கள் சம்பந்தமாக விசாரணைகள் நடாத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சப்ரகமுவ மாகாண நிதி விதி 76.2.5 இன் பிரகாரம் மாகாண சபைக்குச் சொந்தமான அதாவது மாகாண சபையின் பொறுப்பில் காணப்படுகின்ற சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவில் முறையான ஒழுங்குவிதிகள் ஈடுபடுத்துகின்றது என்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பாக இருக்க வேண்டிய போதிலும் கணக்கீட்டு உத்தியோகத்தரினால் நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் தேவையான நடவடிக்கைகள் எடுக்காமையின் காரணமாக ஆளுநரின் செயலகத்தின் மற்றும் பிரதம அமைச்சின் இரண்டு வாகன விபத்துக்கள் தொடர்பாக திருத்தம் செய்யும் | காப்புறுதி இழப்பீட்டினை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கை முன்னெடுத்துச் செல்லப்பட்டு வருகின்றது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தினை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கைகளுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 13,945,278 பெறுமதியினை காப்புறுதி இழப்பீடாக உரிய காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | | |
| (இ) | சப்ரகமுவ மாகாண சபையின் 2019 -2023 காலப்பகுதிக்குரிய ஐந்து ஆண்டுகள் துாரநோக்கினை நோக்கியதான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டம் 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 28,353,251 வெளிநாட்டு உதவியினை செலவு செய்து தயாரித்து அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் செயல்முன்னேற்றம் தொடர்பான ஒரு அறிக்கை 2025 யூலை 20 ஆந் திகதி வரையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதில் மாகாண வருமானத்தினை சேகரிக்கும் முறைமையை அபிவிருத்தி செய்தல், பிரதிப் பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகத்தில் செயற்திட்ட கண்காணிப்பிற்காக இணைய வலையமைப்பினை அடிப்படையாக்க கொண்ட ஒரு முறைமையினை அபிவிருத்தி செயதல் மற்றும் மாகாண காணி பயன்பாட்டு திட்டத்தினை தயாரித்தல் ஆகிய மூன்று பிரதான செயற்பாடுகளுக்காக ரூபா 11,711,620 செலவுசெய்யப்பட்டிருந்த போதிலும் அச்செயற்பாடுகளும் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. திட்டத்தின் ஏனைய செயற்பாடுகள் நிறுவனத்தினால் நிறைவேற்றப்படுகின்ற வழக்கமான செயற்பாடு என்பதனால் ரூபா 28 மில்லியனுக்கு மேற்பட்ட தொகை செலவு செய்து தயாரிக்கப்பட்ட ஐந்து ஆண்டு திட்டத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ஒரு விளைவற்ற செலவாக இருந்தது. | மாகாண வருமான திணைக்களம் மற்றும் பிரதம செயலாளர் (திட்டமிடல்) அலுவலகம் உரிய முறைமையை முழுமையாக அமுல்ப்படுத்தாதிருந்தும் அதற்காக பயிற்சி பெறுதல் மற்றும் துணைக் கருவிகள் பெற்றுக்கொள்ளல் இடம்பெற்றுள்ளன. | 1. ஐந்து ஆண்டு அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்ததன் பின்னர் அதனை அமுல்ப்படுத்துவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தினை தயாரித்து அதன் செயல்முன்னேற்றம் வருடாந்தம் பரீட்சிக்கப்படுதல் வேண்டும்.<br>2. பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள துணைக்கருவிகளை பயன்பாட்டிற்கு எடுத்து முறைமைகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.5 தலைப்பு 809 - மாகாண வருமான திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 111,493,172 ஆன நிலுவை வருமானத்தில் மொத்தமாக ரூபா 5,465,896 நிலுவை வருமானம் 10 ஆண்டுகளுக்கும் 23 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட மிகவும் நீண்ட காலமாக காணப்பட்டு வரும் மீதியானதுடன் ரூபா 1,156,440 நிலுவை வருமானம் 05 ஆண்டுகளுக்கும் 10 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்டு வரும் மீதியாகும். | மீளாய்வாண்டின் இறுதியளவில் 01 ஆண்டிற்கும் 05 ஆண்டுகளுக்கும் இடைப்பட்டதாகக் காணப்பட்ட ரூபா 104,870,834 ஆன நிலுவை வருமானம், ரூபா 63,514,871 வரை ரூபா 41,355,963 ஆல் குறைத்துக் கொள்வதற்கு முடியுமாக இருந்தது. | முறையான திட்டத்திற்கு இணங்க துரிதமாக நிலுவை வருமானத்தை அறவீடு செய்தல் வேண்டும். |

**1.5.6 தலைப்பு 810 - சட்டமும் ஒழுங்கும், நிதியும் திட்டமிடலும், உள்ளூராட்சி, சுகாதாரம், சுதேச மருத்துவம், மகளிர் விவகாரம், கூட்டுறவு, வணிகமும் உணவும், போக்குவத்து, தோட்ட நலன்புரி, சுற்றாடல், செய்திகள், வீடமைப்பும் நிர்மாணங்களும் மற்றும் சமய விவகார மாகாண அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சப்ரகமுவ மாகாண பிரதம அமைச்சினால் உள்ளூராட்சி நிறுவனங்களின் முறையான தேவைப்பாட்டினை ஆய்வு செய்யாது 2015 ஆம் ஆண்டின் போது ரூபா 58,308,411 செலவு செய்து 14 கம்பெக்டர் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு சப்ரகமுவ மாகாணத்தின் 14 உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த இயந்திரங்கள் விதிகளுக்கு பொருத்தமற்றதாக இருந்ததனால் மேற்கூறிய இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்தக்கொள்ளப்படா | ஒரு இய்நதிரம் பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது எனவும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாத 03 இயந்திரங்கள் பிரதம செயலாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது எனவும் 04 இயந்திரங்கள் சாதாரண டேலராக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் 06 இயந்திரங்கள் ஓடுவதிலிருந்து நீக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன். | 1. தேவைக்கு பொருந்தும் வகையில் கொள்வனவு செய்தலினை மேற்கொள்ள வேண்டியதுடன் முறையற்ற கொள்வனவு செய்தல் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>2. பயன்படுத்தப்படாத சொத்துக்களை பயன்படுத்துவது சம்பந்தமாக |

| | | | |
|---|---|---|---|
| | விளைவற்றுக் காணப்பட்டது. | | முகாமைத்துவத்தினால் பொருத்தமான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பெறுகை வழிகாட்டிக் கோவை - 2006 இற்கு இணங்க பெறுகைச் செயற்பாடுகள் செய்யப்பட வேண்டிய போதிலும் கல்வி அமைச்சு மற்றும் பிரதம அமைச்சு அதற்கு முரணாக ஆளுநரின் அங்கீகாரத்திற்கு இணங்க அபிவிருத்தி, நிர்மாணங்கள் இயந்திர அதிகாரசபைக்கு ரூபா 472,838,470 பெறுமதியான 41 நிர்மாண ஒப்பந்தங்களை வழங்கியிருந்தும் மேற்கூறிய அதிகாரசபைக்கு போதியளவு பொறியியலாளர்கள் இல்லாமையின் அடிப்படையில் மேற்கூறிய அதிகாரசபையும் அந்த ஒப்பந்தங்களை நிறைவேற்றும் போது வெளித்தரப்பினர்களுக்கு உப ஒப்பந்தம் வழங்கியிருந்தது. | கௌரவ ஆளுனருக்கு மாகாண சபை நிதி விதியின் பிரகாரம் கேள்வி கோராது மாகாண சபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற இந்த அபிவிருத்தி நிர்மாண இயந்திர அதிகாரசபைக்கு நிர்மாண வேலைகளை ஒப்படைப்பதற்கு கட்டளையிடுவதற்கு அதிகாரம் காணப்படுகின்றது. அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. | அரசாங்க நிதி முகாமைத்துவம் அதிகாரச் சட்டத்தின் 32(1) ஆம் பிரிவின் பிரகாரம் அரசாங்க நிறுவனங்கள் பெறுகை நடைமுறைகளைப் பின்பற்றப்படுதல் வேண்டும். |
| (இ) | பிரதம அமைச்சினால் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு சூரிய சக்தியினாலான வீதி விளக்குகளை வழங்குவதற்கு அந்த நிறுவனங்களின் தேவைப்பாட்டிற்குப் பொருத்தமானதா என்பதனை முன்னரே விசாரிக்காது தொடர்ச்சியாக 01 மணித்தியாலம் 20 நிமிடங்கள் வெளிச்சம் தருகின்ற 90 வோலட் எல்ஈடீ சூரிய சக்தியிலான 1500 வீதி விளக்குகளை கொள்வனவு செய்வதற்கு 2023/2024 ஆம் ஆண்டின் போது கேள்வி மனுக்கள் கோரப்பட்டிருந்தது. மேலும் ஒரு கேள்விதாரர் இரண்டு கேள்விகளை சமர்ப்பித்திருந்தமை, தெரிவு செய்யப்பட்ட வழங்குனர் சோலர் மின் விளக்குகளை இறக்குமதி செய்பவராக இல்லாமை மற்றும் போலி ஆவணங்களைச் சமர்ப்பித்தல் | வழங்கிய தெரு விளக்குகள் பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்கியிருககாததனால் வழங்குனருக்கு இந்த தெரு விளக்குகளை மீள எடுத்துச் சென்று பொருள் விபரக குறிப்புக்களுக்கு இணங்குகின்றவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து 02 சந்தர்ப்பங்களின் போது கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டது எனவும் பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்க தெரு விளக்குகளை வழங்குவதற்கு உரிய வழங்குனர் நடவடிக்கை எடுப்பாராயின் அதன் பின்னர் கொடுப்பனவு செய்வதற்கு 07 உள்ளூராட்சி நிறுவனங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட பணம் வைப்புக்கணக்கில் நிறுத்திவைக்கப்பட்டுள்ளது | 1. தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் பொருள் விபரக்குறிப்பு தயாரிக்கப்படுதல் வேண்டும்.<br><br>2. தொழில்நுட்ப மதிப்பீட்டு நடைமுறையின் போது மதிப்பீட்டு வரையறைகள் தொடர்பாக சரியான மதிப்பீட்டினை மேற்கொள்ள வேண்டியதுடன் பொருட்களைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் பொருத்தமான பரீட்சிப்புக்களின் மூலம் வழங்கப்பட்ட பொருட்கள் |

மற்றும் வழங்குனரின் நிதி சாத்தியவளத்தன்மை ஆகிய நிலைமைகளை அடையாளங்காண்பதற்காக பெறுகைக்குழு, தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் உரியவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் பெறுகை வழிகாட்டிக் ரோகவையின் 8.12.3 ஆம் பிரிவின் பிரகாரம் பொருட்களைப் பொறுப்பேற்பதற்கு முன்னர் உரிய பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்குகின்றதா என்பதனை முறைப்படியாக பரீட்சித்துப் பார்க்காது 1,500 விளக்குகளை ஒரு அலகு ரூபா 19,500 வீதம் மொத்தமாக ரூபா 29,250,000 பணம் செலுத்தும் அடிப்படையில் 02 ஆண்டுகள் உத்தரவாத காலத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. கணக்காய்வினால் விசாரித்ததன் பின்னர் பேராதனை பல்கலைக்கழகத்தின் மின்சார மற்றும் இலத்திரனியல் பொறியியல் பீடத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரிசோதனையின் போது வழங்குனரினால் பொருள் விபரக் குறிப்புடன் பொருந்தியிருக்காத மாதிரி வழங்கப்பட்டிருந்தது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. தெரு விளக்குகள் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தும் தேவைபப்பாட்டிற்கு பொருந்தியிருக்காததன் காரணமாக மீண்டும் அமைச்சினால் பெற்றுக்கொள்ளப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தது டன் வழங்குனருக்கு தெரியப்படுத்தியிருந்தும் அவற்றினை மீண்டும் எடுத்துச் செல்வதற்கு அல்லது பொருள் விபரக் குறிப்பிற்கு பொருத்துகின்ற விளக்குகளை வழங்குவதற்கு 2025 செப்தெம்பர் மாதம் வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

எனவும் இந்த விடயம் சம்பந்தமாக சட்டப் பிரிவிடமிருந்தும் ஆலோசனை வேண்டி ஒரு கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கிறேன்.

பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்கியுளள்ன வா என்பதனை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

3. போலி ஆவணங்களை சமர்ப்பித்துள்ள கேள்வி மனுதாரர்கள் சம்பந்தமாக உரியவாறு சட்ட நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் சப்ரகமுவ மாகாணத்தினது மாகாண சபையின் நிதி விதிக் கோவையின் 76.1.1 விதிக்கு இணங்க தமது அமைச்சின் கீழான அனைத்து திணைக்களங்கள், அதிகாரசபைகள் மற்றும் நிறுவனங்களின் நிதி நிருவாகத்தின் போதியளவானவை பற்றி உறுதிப்படுத்துதல் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் பிரதம செயலாளரின் மூலம் ஆளுநருக்கு பொறுப்புக்கூற வேண்டியதாகும். எனினும் மாகாண பிரதம அமைச்சு செயலாளரினால் சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர அதகாரசபை சம்பதமாக 2022 சனவரி மாதத்தில் வழங்கப்பட்ட தொடக்க புலனாய்வு அறிக்கையின் மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள நிதி ரீதியான நட்டங்களை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்தல் மற்றும் அறிக்கையின் சிபாரிசுகளை அமுல்ப்படுத்துதல் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் இடம்பெற்றிருக்கவில்லை. | தொடக்க புலனாய்வின் மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள நிறுவன மட்டத்தில் அறவிடக்கூடிய அனைத்தையும் அறவீடு செய்தலானது அபிவிருத்தி, நிர்மாண இய்நதிர அதிகார சபையிடமிருந்து அறவீடு செய்து முடிவடைந்துள்ளது எனவும் சிபாரிசு இலக்கம் 23 தொடர்பாக எம்பிலிபிடிய நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்பட்டு வரும் வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் மேலதிக நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இலக்கம் 52 தொடர்பாக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையினை பெற்ற உடன் சம்பளத்திலிருந்து அறவீடு செய்வதற்கும் பணிக்கொடை பணத்திலிருந்து அறவீடு செய்வதற்கும் பணிப்பாளர் சபையின் தீர்மானம் காண்படுகின்றது. | 1. பிரதான கணக்கீட:டு உத்தியோகத்ரினால் நிதிவிதியின் பிரகாரம் தமது பொறுப்பு நிறைவேற்றப்பட வேண்டியதுடன் அடையாளங் காணப்பட்டுள்ள நிதி ரீதியான நட்டத்தை தாமதமின்றி அறவீடு செய்தல் வேண்டும்.<br>2. அதிகார சபையின் உள்ளகக் கட்டுப்பாட்டினை வலுப்படுத்துவதற்காக பொருத்தமான கட்டுப்பாட்டு முறைமையை ஸ்தாபித்து பேணுதல் வேண்டும். |
| (உ) | சனாதிபதி செயலாளரின் 2010 மே 14 ஆந் திகதிய சீஏ/1/17/1 ஆம் இலக்க அரசாங்க செலவுகளை முகாமைத்துவம் செய்யும் சுற்றறிக்கைக்கு இணங்க பிரதான அமைச்சருக்கு 03 வாகனங்களுக்கு தகமையுள்ள மாதாந்த எரிபொருள் படி 1,700 லீற்றர்களுக்கு 2014 ஆம் ஆண்டிலிருந்து 2017 செப்தெம்பர் வரை ரூபா 9,850,170 செலுத்தப்பட்டிருந்தும் பிழையான சிபாரிசின் அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட்ட 2014 யூலை 02 ஆந் திகதிய 2014/60 மற்றும் 2014/61 ஆம் இலக்க சப்ரகமுவ | பிரதம அமைச்சரின் 2014-07 திகதியற்ற கடிதத்தின் வேண்டுதலுககு இணங்க பிரதம் அமைச்சு செயலாளரின் சான்றுபடுத்துதல், பிரதிப் பிரதம செயலாளரின் (நிதி முகாமைத்துவம்) சிபாரிசுடன் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு 2014-07-02 ஆந் திகதி அங்கீகாரம் கிடைத்துள்ளது எனவும் அரசாங்கத்திற்கு ஏதாவது நட்டம் ஏற்பட்டிருக்குமாயின் அது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு நி.பி. 104 இன் பிரகாரம் விசாரணையை நடாத்துவதற்கு தேவையான | சுற்றறிக்கை விதிகளை மீறும் தொடர்புடைய அதிகாரிகள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| மாகாண சபையின் அமைச்சரவை தீர்மானத்திற்கு இணங்க பிரதம அமைச்சருக்கு அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர அதிகாரசபையிடமிருந்து மாதாந்தம் 1500 லீற்றர் எரிபொருள் மற்றும் வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து 1500 லீற்றர் வீதம் அங்கீகரிககப்பட்டு 2014 யூலை மாதத்திலிருந்து 2017 செப்தெம்பர் மாதம் வரை அபிவிருத்தி நிர்மாண அதிகார சபையிடமிருந்து மொத்தமாக ரூபா 5,319,864 தொகையும் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையிடமிருந்து மொத்தமாக ரூபா 5,329,112 தொகையுமாக முழு மொத்தம் ரூபா 10,648,976 ஆன அங்கீகரித்த எரிபொருள் எல்லையை மிகைத்து பிரதம அமைச்சருக்க எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்தது இருப்பினும், முன்னாள் முதலமைச்சரால் 2025 ஒக்டோபர் 21 அன்று மாகாண சபை நிதிக்கு ரூபா 10,649,476 வரவு வைக்கப்பட்டது.. | நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**1.5.6.1 சப்ரகமுவ அபிவிருத்தி நிர்மாண மற்றும் இயந்திர அதிகாரசபை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| நீண்டகாலமாக அறவிடப்படாது காணப்படுகின்ற ரூபா ஒரு மில்லியனை மிகைத்த இரண்டு கடன்பட்டோர்களிடமிருந்து அறவிட வேண்டிய மொத்தமாக ரூபா 7,732,141 பணம் மீளாய்வாண்டின் இறுதி வரை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கடனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | அறவிட வேண்டிய கடனை துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.6.2 சப்ரகமுவ வீதிப் போக்குவரத்து அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | அதிகாரசபையின் கெப் வாகனம் 2022 மார்ச் மாதத்தில் விபத்துக்கு உள்ளாகியிருந்தும் 2025 மே 15 ஆந் திகதி வரையும் அது சம்பந்தமான விசாரணைகள் முடிவடைந்திருக்கவில்லை. அவ்வாறே காப்புறுதியினால் உள்ளடக்கப்படாத ரூபா 594,200 சேதம் சம்பந்தமன பொறுப்பு நிர்ணயிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இந்த கெப் வாகனம் தொடர்பான தொடக்க புலனாய்வு நடவடிக்கை முடிவடைந்து காணப்படுகின்றது. | புலனாய்வு நடவடிக்கைகளை துரிதமாக முடிவு செய்து நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான லொக்பத்திர வருமானம் ரூபா 9,451,725 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 7,425,050 ஆனது 13 மாதங்களுக்கும் 53 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலமாக காணப்பட்டுவரும் 108 பஸ்களிலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவை மீதியாகும். இப்பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது இந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுடன் சில மீதிகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 1. அறவிடக் கூடிய உச்ச அளவிலான பெறுமதிகள் அறவீடு செய்யப்படுதல் வேண்டும்.<br>2. முறையான நடைமுறையை பின்பற்றி அங்கீகாரத்துடன் ஏடுகளிலிருந்து பதிவழித்தல் வேண்டும். |
| (இ) | மாகாணங்களுக்கிடையிலான நுழைவாயில்களுக்காக 70 பஸ்களிலிருந்து அறவிட வேண்டியதாக அடையாளங்காணப்பட்ட நுழைவுக் கட்டணம் ரூபா 4,097,450 நிலுவையாகக் காணப்பட்டதுடன் அவற்றில் 49 பஸ்களுக்கு ரூபா 3,892,700 ஆன நுழைவுக் கட்டணம் 13 மாதங்களுக்கும் 70 மாதங்களுக்கும் இடைப்பட்ட காலமாக நிலுவையாகக் காணப்பட்டது. | தற்பொழுது வரை இந்த பாதீட்டு மீதிகளை அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதடன் சில மீதிகள் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் 2020 இலிருந்து 2024 வரையான காலத்தில் 138 பஸ்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தண்டப் | தற்பொழுது வரை இந்த பாதீட்டு மீதிகள் அறவீடு செய்வதற்கு ஏற்பாடுகள் வழங்கப்பட்டுள்ளதுடன் சில மீதிகள் பணிப்பாளர் | நிர்ணயிக்கப்பட்ட தண்டப் பணம் மற்றும் மிகைக் கட்டணம் உரிய காலத்தில் அறவீடு செய்யப்பட |

| | | | |
|---|---|---|---|
| | பணம் மற்றும் மிகைக் கட்டண பணம் ரூபா 1,358,350 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டியதுடன் காட்டப்பட்டுள்ள நிலுவையான வீதிப் பரீட்சிப்பு தண்டப்பண வருமானம் மற்றும் மிகைக் கட்டணத்தை பதிவழிப்பதற்கு எந்த வாய்ப்பும் இல்லை. |
| (உ) | செயற்பாட்டுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர், முகாமைத்துவ உதவியாளர், நிலையத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர், சாரதி, நேரடிப் பதிவாளர், காவலாளர் ஆகிய பதவிகளின் அங்கீகரித்த எண்ணிக்கையை மிகைத்து 48 நபர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | முன்னாள் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் அல்லது ஆளுநரின் அதிகாரத்திற்கு ஏற்ப ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளதுடன் போதிலும் இந்த 48 ஊழியர்களினால் நிறுவனத்திற்கு சேவை (ஒப்படைத்த கடமை செயற்பாடு) இடம்பெற்றுள்ளதுடன் 2024 செப்தெம்பர் மாதத்திலிருந்து ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடைமுறையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனால் எதிர்வரும் காலங்களில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2024 சனவரி 16 ஆந் திகதிய DMS/SG/0505 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் மிகைப் பதவிகளை அங்கீகரிப்பது சம்பந்தமாக இணங்கிக்கொள்ள முடியாது என தெரிவிக்கப்பட்டுள்ளதனால் அங்கீகரித்த எண்ணிக்கையை மிகைத்து நிறுத்திவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்த நபர் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | சப்ரகமுவ மாகாண சபையின் 1994 இன் 01 ஆம் இலக்க வீதிப் பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டத்தின் 26 ஆம் பிரிவின் பிரகாரம் நியமன அதிகாரியான பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் (அதிகார சபையின் அங்கீகாரம்) பெற்றுக்கொள்ளப்பட்டு 2022 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2024 மார்ச் 31 ஆந் திகதி வரையான கால எல்லையில் ஆளணிக்காக 08 உத்தியோகத்தர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | 2024 செப்தெம்பர் மாதத்திலிருந்து ஆட்சேர்பபு மற்றும் பதவியுயரத்துதல் நடைமுறையானது முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனால் அடுத்துவரும் காலங்களில் அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்பது தொடர்பாக விசாரணைகள் செய்யப்படுதல் வேண்டும். |

### 1.5.6.3 பின்னவல இபரணிகம ஆய்வுப் பூங்கா

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2016 இன் 01 ஆம் இலக்க பின்னவல இபரனிகம ஆய்வு பூங்கா நியதிச் சட்டத்தின் 02 ஆம் பிரிவின் பிரகாரம் ஆய்வுப் பூங்கா 12 குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்காக நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை அந்த 12 குறிக்கோள்களில் 07 குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர்கால மரபுரிமைகளை பாதுகாப்பதற்காக கருத்தரங்குகள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் வெளிக்கள சுற்றுப் பயணங்களை ஒழுங்குபடுத்துதலினை நிறைவேற்றுவதற்காக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். | இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்காத குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.7 தலைப்பு 811 - மாகாண சுகாதார திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| A மற்றும் B தரத்திலுள்ள தளவைத்திய சாலைகளில் இருக்க வேண்டிய வசதிகள் தொடர்பாக சுகாதார அமைச்சு செயலாளரின 2021 திசெம்பர் 27 ஆந் திகதிய 01-18-2020(1) ஆம் இலக்க பொது சுற்றறிக்கையின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டிருந்தும் சப்ரகமுவ மாகாணத்தின் பலாங்கொடை மற்றும் கரவனெல்ல தளவைத்தியசாலைகள் A தரத்திலுள்ள தள வைத்தியசாலையாகவும் எஹலியகொட, கொலொன்ன, கலவான, வறகாபொல ஆகிய தளவைத்தியசாலைகள் B தரத்திலுள்ள வைத்தியசாலைகளாகவும் பெயரிடப்பட்டிருந்தும் மேற்கூறிய வைத்திசாலைகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் நிறைசேவற்றப்பட்டிருக்கவில்லை. | A மற்றும் B தரங்களிலுள்ள தளவைத்தியசாலைகளுக்கு தேவையான மனித வளங்கள் போதிய அளவில் இல்லாமையே அவற்றிற்கு தேவையான வசதிகளை வழங்காமைக்கு பரதான காரணமாகும். சுகாதார அமைச்சின் வரையறைகள் மற்றும் எங்களின் வேண்டுதல்களுக்கு இணங்க இந்த வைத்தியசாலைகளில் இருக்கின்ற ஆளணியை திருத்தம் செய்வதற்காக அவ்வப்போது வேண்டுதல் செய்யப்பட்டிருந்தும் கடந்த காலத்தில் விசேட வைத்தியர்கள் வெளிநாடு சென்றதனால் வைத்தியர்களின் பற்றாக்குறை காணப்படுகின்றது. | வைத்தியசாலைகளின் பௌதீக மற்றும் மனித வளங்களை வழங்குவதற்காக தேவையான நடவடிக்கை துரதமாக எடுத்தல் வேண்டும். |

### 1.5.8 தலைப்பு 812 - மாகாண ஆயுர்வேத திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ஆயுர்வேத திணைக்களம் உள்ளடங்லாக ஆயுர்வேத வைத்தியசாலைகள் மற்றும் மத்திய மருந்தகங்களிடம் மொத்தமாக 17 ஏக்கர்களுக்கு அண்மித்த நிலம் காணப்படுவதுடன் மருத்துவ மூலிகை பயிர்ச் செய்கைகளில் ஈடுபடாத வைத்தியசாலை காணிகளுக்கு பொருத்தமான மருந்து மூலிகை வகைகளை அடையாளங்கண்டு அவற்றினை வளர்ப்பதற்கும் வளப்பதற்ம் வைத்திசாலைகளுக்குத் தேவையான வருடாந்த மருந்து பயன்பாட்டினை மதிப்பீடு செய்து பொருத்தமான மருந்து நாற்றுக்களை பயிரிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருளாதார ரீதியாக பெறுமதியுள்ள மருத்துவ பயிர்களை பயிடும் போது பாதுகாப்பின்மை, நிலத்தின் உரிமை எங்களிடம் இல்லாமை, பராமரிப்பு சிக்கலாக இருத்தல், வருடாந்த இடமாற்றங்களின் மூலம் புதிதாக மருந்துவர்கள் அந்த அந்த நிறுவனங்களுக்கு சென்று இருப்பதன் மூலம் நிறுவனத்தின் மருத்துவ பயிர்ச் செய்கை தொடர்பாக சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்கும் தெரியப்படுத்துவதற்கும் காலம் எடுத்தல் போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. | விளைவற்றுக் காணப்படுகின்ற வைத்தியசாலை நிலங்களை ஆக்கபூர்சமாக மருத்துவ பயிர்ச் செய்கைக்கு ஈடுபடுத்துவது சம்பந்தமாக அடையாளங்காணப்பட்டுள்ள பிரச்சினைகளுக்கு தீர்வுடனான பொருத்தமான செயற்திட்டங்களை தயாரித்து துரிதமாக அமுலப்படுத்துதல் வேண்டும். |

### 1.5.9 தலைப்பு 813 - மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தின் மூலம் 2002 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 04 கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கிய மொத்தமாக ரூபா 2,350,000 கடன் தொகையில் கடனை மீளச் செலுத்துவதற்கு உரிய சங்கங்கள் தவிறியிருந்ததுடன் 2025 மே 08 ஆந் திகதியில் உள்ளவாறு வட்டி உள்ளடங்கலாக மொத்தமாக ரூபா 3,165,078 மீதி மேற்கூறிய சங்கங்களிடமிருந்து அறவிட வேண்டி இருந்தது. | செயற்பாடற்ற மட்டத்தில் காணப்பட்ட கூட்டுறவு சங்கங்களின் கடனை நடுவர் விசாரணைகளின் பின்னர் அறவிடக்கூடியதாக இருந்தமை, வட்டிப் பணத்தை பதிவழிப்பதற்காக ஆளுநரின் அங்கீகாரத்திற்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. கலைப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள சங்கங்களின் கலைத்தல் நடவடிக்கைகள் முடிவடைந்ததன் பின்னர் கடனை அறவீடு செய்யலாம். | நிதியத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள கடனை நிர்ணயிக்கப்பட்ட காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.10 தலைப்பு 820 - மாகாண விதி அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள், சுற்றுலா மற்றும் விளையாட்டுக்களும் இளைஞர் விவகாரமும் மாகாண அமைச்சு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளின் போது மாகாண வீதி அமைச்சின் நிதி ஏற்பாட்டின் அடிப்படையில் கொலன்ன பிரதேச சபையின் மேற்பார்வையின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த 21 விளையாட்டு மைதான அபிவிருத்தி செயற்திட்டங்களின் கொடுப்பனவு செய்யப்பட்ட செலவு விடயங்களின் மூலம் உள்ளடக்கப்பட்டிருந்த குவிக்கப்பட்ட மண்ணை பரப்புதல் என்ற வேலை விடயம் மேலதிக வேலை விடயமாக உள்ளடக்கப்பட்டு 38,872 கனமீற்றர் மண்ணுக்காக மொத்தமாக ரூபா 5,928,010 மிகை மதிப்பீடு செய்யப்பட்டு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு வரை அந்த மிகைக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த பணத்தை அறவீடு செய்வதற்கு மற்றும் பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே மாகாண வீதி அமைச்சினால் 2017 ஆம் ஆண்டின் போது எம்பிலிபிடிய பிரதேச சபையின் மூலம் நிறைவேற்றிய செயற்திட்டத்திற்காக ரூபா 17.87 மில்லியன் பிழையாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தமை மற்றும் 03 செயற்திட்டங்களுக்கு ரூபா 4.16 மில்லியன் விளைவற்றதாக செலவு செய்யப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு வரை பிழையான கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளை முடிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒழுக்காற்று விசாரணைகள் தற்பொழுது இடம்பெற்று வருகின்றது. | அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். பொறுப்பின்றி கடமைகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.11 தலைப்பு 821 - மாகாண விளையாட்டு அபிவிருத்தி திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 48 ஆவது தேசிய விளையாட்டு போட்டிக்கு பங்குபற்றிய சப்ரகமுவ மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்திய விளையாட்டு வீரர்கள் மற்றும் விராங்கனைகளுக்கு சப்பாத்துக்களை கொள்வனவு செய்வதற்காக விசேட நிதி உதவிகளை வழங்குவதற்கு 2024 யூன் 24 ஆந் திகதிய சீஎஸ்03/01/ஆ.அ வீதி - 2024 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் ஆளுநரின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தும் அதற்கு எதிராக விசேட நிதி உதவியினை வழங்குமாறு வவுச்சர்களை பிழையாக தயாரித்து மல்லவபொர விளையாட்டு வீரர்களுக்கு படியாக ரூபா 8,500 விதம் 24 நபர்களுக்கு ரூபா 204,000 தொகையும் 40 உதைபந்து விளையாட்டு வீரர்கள் வீராங்கனைகளுக்கு ரூபா 20,000 வீதம் ரூபா 800,000 இனை செலுத்தியதாக பிழையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எவ்வாறாயினும் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தினால் பெறுகை நடைமுறையை பின்பற்றாது 2024 யூன் மாதத்தின் போது சப்பாத்துக்கள் கொள்வனவு செய்து பணம் இன்றி சப்பாத்துக்கள் விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தன. | முறையான விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் இக்கணக்காய்வு ஐய வினாவிற்கு பதில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என அவதானிக்கப்பட்டுள்ளதால் உரிய உத்தியோகத்தர்களுக்கு ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் நிதிரீதியான நட்டம் ஏற்பட்டிருக்குமாயின் அறவீடு செய்தல் வேண்டும். |

## 1.5.12 தலைப்பு 830 - சமூக நலன்புரி, நன்னடத்தை, கிராமிய அபிவிருத்தி மற்றும் கிராமிய கைத்தொழில் மாகாண அமைச்சு

### 1.5.12.1 மாகாண சமூக சேவை நிதியம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 1994 இன் 04 ஆம் இலக்க சப்ரகமுவ மாகாண சபையின் சமூக சேவை நிதியத்தை தோற்றுவிப்பது தொடர்பாக நியதிச்சட்டத்தின் 06(iv) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியை விடுவிக்கும் போது உதவியற்ற மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளுக்கு ஊட்டச்சத்து, சுகாதாரம் மற்றும் கல்வி நடவடிக்கைகளுக்காக உதவியை வழங்குவதற்கு பணம் விடுவிக்கலாம் எனக் காட்டப்பட்டிருந்தும் 2024 ஆம் ஆண்டில் எந்த பிரதேச செயலகத்தினாலும் கல்வி உதவி வழங்கப்பட்டிருக்காததுடன் இரண்டு பிரதேச செயலகங்களினால் மாத்திரம் இரண்டு நலன் பெறுனர்களுக்கு ஊட்டச்சத்து உதவி வழங்கப்பட்டிருந்ததனால் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள மக்களுககு மாகாண சமூக சேவை நிதியத்தின் மூலம் போதியளவு சலுகை வழங்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது செயற்திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. அதற்கிணங்க 2025 ஆம் ஆண்டிலிருந்து மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் அதன் செயலாற்றல் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் முறையான மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். |
| (ஆ) | சமூகசேவை நிதியத்தை தோற்றுவிப்பது தொடர்பான நியதிச் சட்டத்தின் 07 ஆம் பிரிவின் பிரகாரம் தயாரித்து அங்கீகரிகப்பட்ட பிரமாணங்களின் 24 ஆம் பிரமாணங்களின் பிரகாரம் வேறு எந்த உதவி திட்டத்தினாலும் உதவி அல்லது நிவாரணம் கிடைக்காத மிகவும் வறுமை நிலையில் இருக்கின்ற குடும்பங்களிலுள்ள | பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் தேவையான தரவுகளைப் பெற்று எந்த உதவியும் கிடைக்காத குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு எதிர்வரும் காலங்களில் எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |

| | | |
|---|---|---|
| நபர்களுக்கு நிவாரணம் வழங்கக்கூடியதாக இருந்த போதிலும் மாகாண சமூக சேவை உத்தியோகத்தர்களின் மூலம் எந்த உதவியும் கிடைக்காத குடும்பங்கள் தொடர்பாக மீளாய்வு செய்து அவ்வாறான குடும்பங்களை அடையாளம் காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

**1.5.13 தலைப்பு 831 - மாகாண கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் கைத்தொழில் அபிவிருத்தி திணைக்களத்தின் செயற்பாடுகளாக அடையாளங்காணப்பட்டிருந்த பாரம்பரிய கைத்தொழில்களை பாதுகாப்பதனை முன்னிட்டு தேவையான நிவாரணங்களை வழங்குதல், விரிவுபடுத்துதல், ஊக்குவிப்புச் செய்தல், அதற்கு உதவி வழங்குதல், இளைஞர்கள் யுவதிகளுக்கு பயிற்சி வழங்குதல், சுய தொழிலுக்காக உதவி செய்தல், சிறிய கைத்தொழிலாளர்கள் மற்றும் புடவைக் கைத்தொழில்ாளர்களை ஊக்குவித்தல், கைத்தொழில்களை மீளாய்வு செய்தல், கைத்தொழில்களை உருவாக்குதலும், கண்காட்சிகளை நடாத்துதல் மற்றும் கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல் ஆகிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பாரம்பரிய கைத்தொழிலாளர்களை ஊக்குவித்தல் மற்றும் உற்சாகப்படுத்துவதற்காக கைத்தொழில் போட்டிகளை நடாத்தி அவற்றினை மதிப்பீடு செய்து சந்தைகளை வழங்குதல் போன்ற விடயங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன. | திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட வேண்டிய அனைத்து செயற்பாடுகளையும் நிறைவேற்றுவதற்கு கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். |

### 1.5.13.1 கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பலவின்ன முன்தயாரிப்பு கொங்கிரீட் வேலைத்தளம் அமைந்துள்ள காணி 1990 ஆம் ஆண்டிலிருந்து கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டு வந்திருந்த போதிலும் 2025 ஆம் ஆண்டு வரை அதன் உரிமை பொறுப்பேற்கப்பட்டிருக்கவில்லை. | இக்காணியும் கட்டிடங்களும் பிரதேச செயலாரிடம் வேண்டிக்கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை அச்செயற்பாடு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் மீண்டும் வேண்டிக்கொள்ளப்பட்டு இந்த நடவடிக்கையை துரிதப்படுவதற்கு இணங்கி கொள்ளப்படுகின்றது. | காணியின் உரிமையை பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பலவின்ன முன்தயாரிப்பு கொங்கிரீட் வேலைத்தளத்தில் 2025 மே மாதமளவில் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்களும் 18 வேலையாட்களும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தும் அது தோற்றுவிக்கப்பட்ட திகதியிலிருந்து 35 ஆண்டுகள் கடந்திருந்தும் அதற்காக ஆளணியினர் இணைத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டிலிருந்து ஆளணியினரை அங்கீகரித்து முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் வேண்டிக் கொள்ளப்பட்டிருந்தும் இதுவரை அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் நியாயப் படுத்தும் அறிக்கையுடன் அந்த வேண்டுதலினை சமர்ப்பிப்பதற்கு பணிப்பாளர் சபை நடவடிக்கை எடுக்கும். | ஆளணியினர் அங்கீகரித்துக்கொள்ளப்படுதல் வேண்டும். |

### 1.5.13.2 புடவைக் கைத்தொழில் வேலைத்தளங்களை தோற்றுவித்தலும் நிருவகித்தலும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| திணைக்களத்தின் கைப்பணி நிறுவனங்களில் இருக்கின்ற புடவைத் தொழிலாளர்களுடன் ஒப்பிடுகையில் கைதகைத்தறிகளில் மிகைகள் காணப்பட்டதுடன் முழு புடவைக் கைத்தொழிலாளர்கள் 282 நபர்களுக்கு மத்தியில் 175 நபர்கள் 55 வயதுக்கு மேற்பட்ட | புதிய தொழிலாளர்களை சேர்த்துக்கொள்வதற்காக பிரதேச செயலகங்களினூடாக புரிந்துணர்வு நிகழ்சித்திட்டங்களுக்கு பங்குபற்றி தெரியப்படுத்துதல் | புடவைக் கைத்தொழிலை தொடர்ச்சியாக பேணுவதற்கு துரித நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| கைத்தொழிலாளர்களாகும். இளைய வயதுள்ள கைத்தொழிலாளர்களை கவருவதற்காக திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கேகாலை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் அமைந்துள்ள 02 புடவைக் கைத்தொழில் நிலையங்கள் செயற்படாதிருப்பதன் காரணமாக ரூபா 4,128,000 பெறுமதியுடனான கட்டிடங்களும் உபகரணங்களும் மற்றும் ரூபா 2,400,000 பெறுமதியைக் கொண்ட காணியும் நீண்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டன. | செய்யப்பட்டுள்ளது.. | |

## 1.5.14 தலைப்பு 832 - மாகாண நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்பு திணைக்களம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| முருத்தெட்டுவ ஆண் பிள்ளைகள் தங்கியிருக்கும் நிலையத்திற்கு ரூபா 17,095,205 செலவு செய்து நிர்மாணிக்கப்பட்ட மூன்று மாடி ஆலோசனை நிலையகட்டிடம் 2019 செப்தெம்பர் 26 ஆம் திகதி திறக்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கவில்லை | இநத நிலையம் சராசரியாக 15 பிள்ளைகளுக்கு குறைந்த எண்ணிக்கையானவர்கள் தங்கியிருப்பதுடன் சில சற்தர்பங்களில் 10 இற்கும் குறைவாக இருப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பத்தில் விரவுரைகளுக்காக வேறு விரிவுரை நிலையங்களுக்கு அழைத்துச் செல்வதற்கான தேவை ஏற்படுவதில்லை தற்பொழுது வதிவிட மாணவர்களுக்கு தளமாடியில் சலுன் கற்கை நெறியினை பயில்வதற்காக ஒரு சலுன் பிரிவினை ஸ்தாபிப்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது | 1. கட்டிடங்களை பயன்படுத்துவது தொடர்பாக கவனம் செலுத்தியதன் பின்னர் உரிய நிர்மாணத் திட்டங்கள் தயாரிக்கப்படுதல் வேண்டும<br>2. செலவு செய்யப்பட்டுள்ள பணத்திற்கு நேரொத்த வகையில் பிரதிபலன்களைளப் பெற்றுக்கொள்வதற்கு முகாமைத்தவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.5.15 தலைப்பு 840 - கல்வி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் கரலாச்சார விவகார மாகாண அமைச்சு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பொரால பாடசாலையின் விவசாய பயிற்சி நிலையமானது 10 அடிப்படை குறிக்கோள்களுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் 2006 இலிருந்து மீளாய்வாண்டு வரையான 18 ஆண்டுகளில் அவற்றில் 02 அடிப்படை குறிக்கோளகளை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும் 26 பாடசாலை நிகழ்ச்சித்திட்டங்கள் 26 நாட்களில் நடாத்தப்பட்டிருந்ததுடன் 2024 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 11 மாணவர்களுக்கு NVQ இறுதிப் பரீட்சைக்காக பயிற்றுவிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் ஆண்டு முழுவதும் நிகழ்சித்திட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கைகளை திட்டமிடுவதன் மூலம் இந்த நிறுவனத்தை சிறப்பாக பயன்படுத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருககவில்லை. | மாகாண கல்வித் திணைக்களம் மற்றும் வலய கல்வி அலுவலகங்களினூடாக நிகழ்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி அந்த பயிற்றுவித்தல்களை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | பயிற்சி நிலையங்களை ஆரம்பிக்கும் குறிக்கோளினை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சாதாரண கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்திட்டத்தின் கீழ் புத்தக அலுமாரிகளை கொள்வனவு செய்யும் ஒப்பந்த உடன்படிக்கையின் 05 ஆம் நிபந்தனையின் பிரகாரம் 2023 நவம்பர் 28 ஆந் திகதிக்கு முன்னர் பொருட்களை பகிர்ந்தளித்தலினை | கருத்துரை வழங்கப்படவில்லை | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொண்டு முடிவுசெய்ய வேண்டிய போதிலும் 2024 ஏப்ரல் 05 ஆந் திகதி வரை பகிர்ந்தளித்தல் முடிவு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் தாமதக் கட்டணமாக ரூபா 306,577 அறவிடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | கணனி கதிரை, கணனி மேசை, ஆசிரியர் கதிரை, இரும்பு ஆசிரியர் மேசை என்பவற்றை கொள்வனவு செய்வதற்குரிய கேள்வி ஆவணங்களில் மற்றும் ஒப்பந்த உடன்படிக்கையில் உபகரணங்களை பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்க வேண்டிய காலம் காட்டப்பட்டிருந்துடன் கணக்காய்வினால் பரீட்சிக்கப்பட்ட 06 பாடசாலைகளுக்கு தாமதித்து உபகரணங்கள், பகிர்ந்தளிக்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் பிரகாரம் அது தொடர்பாக அறவிட வேண்டிய ரூபா 972,497 தாமத கட்டணம் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | கணனி கதிரை, கணனி, மேசை, ஆசிரியர் கதிரை, இரும்பு ஆசிரியர் மேசை என்பவற்றை செய்ய வேண்டிய திகதியில் வழங்குவதற்கு முடியாது என தெரிவித்து காலத்தை நீடிக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்ததுடன் 2023-12-30 ஆந் திகதி வரை நீடித்து வழங்கப்பட்டிருந்ததுடன் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கான அடிப்படை இல்லை. | 1. ஒப்பந்த உடன்படிக்கையில் தாமதக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>2. தாமதத்தை கவனத்தில் கொள்ளாது கொடுப்பனவு செய்யப்பட்டிருக்குமாயின் அதன் மூலம் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை பொறுப்புக்கூற வேண்டிய உத்தியோகத்தரிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 30 பாடசாலைகளுக்கு கணிதம் மற்றும் ஆங்கில செயற்பாட்டு அறைகளைத் தயாரித்து மாணவர்களின் பயன்பாட்டிற்காக ஒப்படைக்கப்பட்டிருந்தும் மீண்டும் திறந்து வைத்தல் நடவடிக்கைகளுக்காக ஞாபகார்த்தப் பலகை, பத்திரிகை அறிவித்தல் மற்றும் சஞ்சிகை செலவுகளாக ரூபா 639,465 செலவு செய்யப்பட்டிருந்தது. | கௌரவ ஆளுநரினால் மாகாண சபையின் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடு தொடர்பாக மாகாணத்திலுள்ள மக்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என கவனம் செலுத்தப்பட்டிருந்ததுடன் பத்திரகை அறிவித்தல் பிரதம செயலாளரின் அங்கீகாரத்துடன் இந்த அமைச்சிற்குரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தல் | அரசாங்கத்தின் நிதியை விளைவற்றதாக செலவு செய்யாதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வழங்கப்பட்டது. அதற்கிணங்க செயற்திட்டத்திற்குரிய நிருவாகச் செலவுகளின் மூலம் மேற்கூறிய செலவுகள் மேற்கொள்ளப்பட்டன. | |
| (உ) | தெஹியோவிட கல்வி வலயத்தில் 03 மாகாணகவர்களிலிருந்து 924 மாணவர்கள் வரையான விச்சில் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்கின்ற 49 பாடசாலைகளின் மாணவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் போதியளவு நீர் வசதிகள் இல்லை. | மாகாண கலவி அமைச்சிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | அனைத்து பாடசாலைகளினதும் அடிப்படைத் தேவைப்பாடுகளை பூரணப்படுத்துவதற்கு துரிதமாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.15.1 சபரகமுவ பாலர் கல்வி அபிவிருத்தி அதிகாரசபை**

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ மாகாணத்திலுள்ள அனைத்து பாலர் அபிவிருத்தி நிலையங்களையும் பதிவுசெய்தல், ஒழுங்குபடுத்துதல் மற்றும் மேற்பார்வை செய்தல் அதிகாரசபையின் பிரதான செயற்பாடாக இருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட 1500 முன் பள்ளிகளில் 519 முன்பள்ளிகள் மீளாய்வாண்டிற்கான பதிவு செய்தலினை வழங்கும் போது கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்ற அடிப்படை வரையறையான உரிய முன்பள்ளி ஆசிரியை டிப்ளோமா கற்கைநெறியை பயின்றிருக்காததன் அடிப்படையில் பதிவுசெய்தவை புதுப்பிக்காதிருந்தும் | அடிப்படை வரையறையான உரிய முன்பள்ளி ஆசிரியைகள் முன்பளி டிப்ளோமா கற்கைநெறியை பயின்று இருக்காமையினைக் காணக்கூடியதாக இருந்தது. உரிய வரையறையினை பூரணப்படுத்திக் கொள்வதற்காக தற்பொழுது தேவையான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | பதிவினை புதுப்பித்துக் கொள்வதற்காக அதிகாரசபை தலையீடு செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கூறிய முன்பள்ளிகள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | முன்பள்ளி கல்வி தொடர்பான தேசிய கொள்கைகளுக்கு இணங்க மாகாண அதிகாரிகளின் மூலம் செயற்பாடுகளை நிறைவேற்றும் போது கொள்கைகளை அமுல்ப்படுத்தும் மாகாண திட்டத்தினை செயற்படுத்தும் போது அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள், மற்றும் அதன் தரம் தொடர்பாக பாலர் கல்வி தொடரபான ஆலோசனைக் குழுவினூடாக பலர்களை பேணிக்காத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல் தொடர்பான தேசிய ஒருங்கிணைப்பு குழுவிற்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்பொழுது தேசிய குழுவின் போது ஒரு மாகாணமாக உரிய விடயங்கள் காட்டப்பட்டுள்ளன. எவ்வாறாயினும் உங்களுடைய அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு உரிய விடயம் இந்த ஆண்டிலிருந்து எழுத்து மூலம் தேசிய குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | மாகாண திட்டத்தினை அமுல்ப்படுத்தும் போது அது சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானம் தேசிய ஒருங்கிணைப்பு குழுவிற்கு அறிக்கையிடப்படுதல் வேண்டும். |
| (இ) | முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2019 செப்தெம்பர் 06 ஆந் திகதிய DMS/SG/05/1 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் அதிகாரசபைக்கு சிரேஷ்ட மட்டத்தில் 01 பதவி, இரண்டாம் மட்டத்தில் 02 பதவிகள் மற்றும் ஆரம்ப மட்டத்தில் 02 பதவிகளாக மொத்தமாக 05 பதவிகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் அப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஒரு பணிப்பாளர் இணைத்துக் கொள்ளல் அடிப்படையில் சேவையாற்றி வருகின்றனர். | அடுத்துவரும் பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் போது இந்த விடயம் சமர்ப்பிக்கப்பட்டு இது தொடர்பாக தீர்மானம் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அங்கீகரித்த ஆளணிக்காக ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு ஆளணியினரை சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்து அதிகாரசபையின் வினைத்திறனை அதிகரிக்கச் செய்தல் வேண்டும். |

**1.5.16 தலைப்பு 841 - மாகாண கல்வி திணைக்களம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.6 ஆம் பந்தியின் பிரகாரம் தெஹியோவிட வலய கல்வி அலுவலகத்தின் இல்லங்களிலிருந்து அறவிடப்படுகின்ற உத்தியோகபூர்வ பொருளாதார வாடகை 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக திருத்தம் செய்யப்படாது பழைய பொருளாதார வாடகை அறவிடப்பட்டு வருகின்றது. | அனைத்து உத்தியொகபூர்வ இல்லங்களையும் புதிதாக மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொருளாதார வாடகையானது காலரீதியாக மதிபீடு செய்யப்பட்டு அறவிடப்படுதல் வேண்டும். |
| (ஆ) | 04 வலய கல்வி அலுவலகங்கள் தொடர்பாக அவற்றின் மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட 32 பாடசாலைகள் மற்றும் பிரிவு கலவி அலுவலகங்களை திருத்தம் செய்வது தொடர்பான 77 வேலை விடயங்களுக்காக மொத்தமாக ரூபா 15,569,045 செலுத்தப்பட்டிருந்ததுடன் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரீட்சப்பின் போது மொத்தமாக ரூபா 1,212,697 மிகையாக செலுத்துதல் இடம்பெற்றிருந்தது என உறுதிப்படுத்தப்பட்டிருந்தும் அந்த மிகைக் கொடுப்பனவுகள் உரிய தொழில் நுட்ப உத்தியோகத்தர்களால் அடையாளங்காணப்பட்டிருக்காததுடன் அளவீடுகள் சரியானவை என அவரால் சான்றுபடுத்தப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவுகளை அறவீடு செய்தல் வேண்டும். | 1. இறுதி வலைப்பட்டியல்களை சான்றுபடுத்தும் நடைமுறையை முறைப்படுத்துவதற்காக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>2. மிகைக் கொடுப்பனவுகளை சான்றுபடுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.17 தலைப்பு 850 - காணி மாகாண நீர்ப்பாசனம், கமத்தொழில், கால்நடை உற்பத்தி, கால்நடை சுகாதாரம் மற்றும் கடற்றொழில் விவகார மாகாண அமைச்சு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மாகாணத்தில் இருக்கின்ற அலங்கார மீன் தொழில்முயற்சியாளர்கள் தொடர்பான தரவு முறைமை அமைச்சில் இல்லாததுடன் அலங்கார மீன் கைத்தொழிலின் அபிவிருத்தி தேவைப்பாடு, நிவாரண செயற்திட்டம் தொடர்பாக தெரியப்படுத்தும் நடைமுறை, நலன் பெறுனர்களை தெரிவுசெய்யும் வரையறை என்பன தொடர்பாக கவனம் செலுத்தாமையின் காரணமாக 2024 ஆம் ஆண்டின் போது சப்ரகமுவ மாகாணத்தின் நீர்வாழ் உயிரினங்கள் முகாமைத்துவ அனுமதிப்பத்திரத்தினைப் பெற்றுக்கொண்ட 190 தொழில் முயற்சியாளர்கள் பதிவுசெய்திருந்த போதிலும் மீளாய்வாண்டிற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 3,500,000 நிதி ஏற்பாட்டிலிருந்து 17 நலன்பெறனர்களுக்கு மாத்திரம் நிவாரணமாக ரூபா 1,549,592 வழங்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் தேசிய நீர்வாழ் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையுடன் இணைந்து அதற்காக ஒரு வரையறை பட்டியலை தயாரிக்குமாறும் தற்பொழுது கணனி மயப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்ற தரவு முறைமைகளை நாளதுவரையாக்கி பேணுமாறும் உதவிப் பணிப்பாளருக்கு (திட்டமிடல்) அலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டினை உச்ச அளவு வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.5.18 தலைப்பு 851 - மாகாண காணி ஆணையாளர் திணைக்களம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) இரத்தினபுரி பிரதேச செயலகப் பிரிவில் முவகம பொத்குல் மலையில் சமகிபுரம் 182 C கிராம உத்தியோகத்தர் பிரிவில் அமைந்துள்ள மிரிஸ்ஹேன முகலான எனும் பெயருள்ள காணியில் 20 பேச்சர்ஸ் அளவான காணியை ஒரு தனியார் கம்பனிக்கு ஒரு தொடர்பாடல் நிலையத்தை | கருத்துரை தரப்படவில்லை. | தொடர்பாடல் நிறுவனத்தினால் காணியை வணிக நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தியுள்ளதனால் நீண்டகால குத்தகை அங்கீகாரத்தினை வழங்கி குத்தகையை அறவீடு செய்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணிப்பதற்காக இரத்தினபுரி பிரதேச செயலாளரினால் 1995 சனவரி 03 ஆந் திகதி நீண்டகால குத்தகை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்கு உட்பட்டு விடுவித்து 30 ஆண்டுகள் காலம் கடந்திருந்தும் மேற்கூறிய காணியிலிருந்து நீண்டகால குத்தகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) யட்டியாத்தோட்டை பிரதேச செயலகப் பிரிவில் மூ.பி .கே 2868 இன் காணிததுண்டு இலக்கம் 05 ஆக காட்டப்படுகின்ற அரசாங்க காணியில் 2.161 ஹெக்டயர் காணிப் பகுதி 2002 மார்ச் 22 ஆந் திகதியிலிருந்து வரையறுத்த சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்திற்கு ஒளிபரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தும் சுயாதீன தொலைக்காட்சி நிறுவனத்தினால் 2008 ஆம் ஆண்டிலிருந்து குத்தகையை செலுத்த தவறியவதனால் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,189,120 குத்தகைப் பணம் நிலுவையாக காணப்பட்டது. | கருத்துரை தரப்படவில்லை. | நிலுவைக் குத்தகை பணத்தை தவணை ரீதியாக அல்லது துரிதமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 1.5.19 தலைப்பு 852 - மாகாண கமத்தொழில் திணைக்களம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது மாகாண கமத்தொழில் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்த பிரதானமாக தென்னை பயிர்ச் செய்கை செய்யப்பட்டுள்ள மாருக்வதுர பண்ணை 2021 ஆம் ஆண்டிலிருந்து தொடர்சசியாக நிதி நட்டம் | கருத்துரை தரப்படவில்லை. | பண்ணை நிதி ரீதியான நட்டம் அடைவதற்கான காரணத்தை அடையாளங்காணல், புதிய தொழில் நுட்பங்களையும் இயந்திர உபகரணங்களையும் |

அறிக்கையிடப்பட்டு 2024 ஆம் ஆண்டின் போது ரூபா 13 மில்லியன் நிதி நட்டம் அடைந்து கொள்ளப்பட்டிருந்துடன் மாகாண சபை நிதியத்திற்கு நிதி ரீதியான நட்டத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த பண்ணையை இலாபம் உழைக்கும் மட்டத்திற்கு கொண்டு வருவதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதற்கிணங்க 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு திரண்ட நட்டம் ரூபா 21,506,096 ஆக இருந்தது. மேலும் 2025 யூலை மாதம் தேங்காய் அறுவடையிலிருந்து ரூபா 78,600 பெறுமதியான 600 தேங்காய்கள் பண்ணை விளைச்சல் பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படாது பணத்தைப் பெற்றுக கொள்ளாமல் முகாமையாளரினால் கேகாலை பிரதி கமத்தொழில் பணிப்பாளர் அலுவலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது என கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டதனால் பண்ணையின் தேங்காய் விளைச்சல் தவறான பயன்பாட்டிற்கு உள்ளாகியுள்ளது எனவும் மேலே குறிப்பிட்டவாறு குறிப்படத்தக்க அளவான நிதி நட்டம் உருவாகுவதற்கு பிரதானமாக தாக்கமளித்துள்ளது எனவும் அவதானிக்கப்பட்டது. மேலும் 33 ஏக்கர்களான ஒட்டுமொத்த பண்ணை நிலத்தின் அளவில் 27 ஏக்கர் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன.

பயன்படுத்துதல், வேலையாள் பயிற்சி, குறைவாக பயன்படுத்தப்பட்ட பண்ணை நிலத்தை முழுமையாக பயன்படுத்துதல் என்பவற்றின் மூலம் வருமானத்தை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.